## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (15)

# தன்னை வென்றவன்; தரணியை வென்றவன்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

என்பதற்காக என் கட்சி கொள்கைகளை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்பதில்லை என்று தெரிவித்ததோடு, சட்ட புத்தகங்களையெல்லாம் கொடுத்துதவி படிக்கச் செய்தார்.

லிங்கன் தனது 23வது வயதில், இல்லினாய்ஸ் மாநில சட்டப் பேரவை தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளராக, அந்தக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட போதிலும், அதில் வெற்றி வாய்ப்பினை இழந்தார். மீண்டும் 1834ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு தனது 25வது வயதில் சட்டப் பேரவை உறுப்பினராக ஆனார். மீண்டும் 1836ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்றார். அந்த நேரத்தில் இல்லினாய்ஸ் மாநிலத்தின் தலைநகரம் மாற்றப்பட்டதால், தான் வசித்து வந்த சேலம் நகரிலிருந்து இரவல் குதிரை ஒன்றைப் பெற்று, அதிலே தனது புத்தகங்களையும் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு புதிய தலைநகரமான ஸ்பிரிங் ஃபீல்டுக்கு கையில் ஏழு டாலர்கள் மட்டுமே உள்ள நிலையில் பயணமானார் லிங்கன்.

அமெரிக்காவில் நீக்ரோ அடிமைகளைக் கொடுமையாக நடத்துவதை அறிந்தும், நீக்ரோ மகளிரைக் கூட விற்பனைப் பொருட்களாக சந்தையிலே நிறுத்தி வியாபாரம் செய்கிறார்கள் என்றும் செவி வழிச் செய்தியாக தன் இளம் வயதிலேயே அறிந்து அதிர்ச்சியடைந்த ஆப்ரகாம் லிங்கன், ஒரு நாள் அந்தக் காட்சியை நேரிலே கண்ட போது தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து தேம்பித் தேம்பி அழுதார்.

ஏழ்மையான குடும்பத்திலே வறுமை வாட்டும் நிலையிலே வாழ்ந்த போதிலும், பணம் சம்பாதித்துச் செல்வந்தராக வேண்டுமென்ற ஆசை எப்போதும் ஆப்ரகாம் லிங்கனுக்கு ஏற்பட்டதில்லை. பணத்தை விட, ஒரு மனிதனுக்கு நல்ல ஒழுக்கமும், நேர்மையான தன்மையும்தான் முக்கியம் என்றே அவர் நினைத்தார்.

ஆப்ரகாம் லிங்கன் வசித்த கிராமத்திற்கு அருகில் "சேலம்" நகரில் ஹொர்டன் என்பவர் நடத்தி வந்த மதுக்கடை ஒன்றினை லிங்கனிடம் கொடுத்து அதனை நடத்தும்படியும், அதற்கான தொகையை தவணை முறையில் தருமாறும் கூறியதன் பேரில் அதனை லிங்கன் நடத்தத் தொடங்கினார். அந்த சேலம் நகரில் இலக்கிய விவாத சங்கம் என ஒன்று இருந்தது. அங்கிருந்தவர்கள் லிங்கனை முதலில் மதிக்கா விட்டாலும், லிங்கனின் தீப்பொறி பறக்கும் பேச்சுக்களைக் கேட்ட பிறகு பாராட்டத் தொடங்கினார்கள்.

இதற்கிடையே மதுபானக் கடை நட்டத்தில் இயங்கியதால், அதன் உரிமையாளர் வேறொருவருக்கு விற்றுவிட, லிங்கன் அடைக்க வேண்டிய கடன் தொகையை கொஞ்சம் கொஞ்சமாக பல ஆண்டுகளில் செலுத்தினார். அதன் மூலம் லிங்கன் ஒரு நேர்மையான மனிதர் என்ற பெயர் நிலைத்தது. மதுக்கடையை நடத்திய போதும் லிங்கன் ஒரு போதும் மது அருந்தியதில்லை.

லிங்கன் தனது 21வது வயதில், ரட்லஜ் என்ற பெண்ணை காதலித்த போதிலும், அதனை யாரிடமும் வெளிப்படுத்தவில்லை. ரட்லஜ்க்கும், வேறொரு இளைஞனுக்கும் திருமணமானபோது லிங்கன் தனக்குத் தானே வருந்தினார். ஆனால், ரட்லஜ்ஜை மணந்தவன் எங்கோ ஓடி விட்டான். அதன் பின்னர், அவளுடைய பெற்றோர் லிங்கனிடம் அவளை மணக்க விருப்பமா என்று கேட்டபோது, இவர் அளித்த ஒப்புதலின் பேரில் திருமணம் உறுதி செய்யும் விழா நடைபெற்றது. ஆனால் திருமணம் நடைபெறுவதற்கு முன்பே, ரட்லஜ் நோய் வாய்ப் பட்டு இறந்து விடுகிறாள். லிங்கனால் அவளை மறக்க முடியவில்லை. அவளது கல்லறைக்குச் சென்று தனது இனிய இதயம் அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறது என்றார்.

ஆப்ரகாம் லிங்கன் தனது 33வது வயதில் 21வயதான மேரிடாட் என்பவரை மணந்தார். ஆனால், அதற்கு முன்பு நடைபெற்ற சம்பவம்? மேரி டாட் லிங்கனின் நெருங்கிய நண்பரான எட்வர்ட் என்பவரின் மைத்துனி. அவளை லிங்கனுக்கு மணமுடிக்க எட்வர்ட் விரும்பிய போதிலும், அவருடைய மனைவிக்கு அதிலே விருப்பமில்லை. எனினும் எட்வர்ட் தன் மனைவியை ஒப்புக் கொள்ளச் செய்து, திருமண உறுதி விழாவும் நடைபெற்றது. ஆனால் அதன் பின்னர், அப்போது அமெரிக்காவில் மிகப்பெரிய அரசியல்வாதியாக திகழ்ந்த ஸ்டீபன் டக்ளஸ் என்பவர், தன் மனைவியை இழந்த நிலையில் மேரி டாட்டை மணக்க விரும்பினார். இதைக் கேள்விப்பட்ட லிங்கன், தனக்கு திருமணமே வேண்டாமென்று ஒரு கடிதத்தை மேரி டாடிற்கு எழுதினார். எனினும் நண்பன் ஜோசுவா கூறியதின் பேரில், அவளை நேரில் பார்க்கச் சென்ற போது, மேரி டாட், திருமண உறுதி செய்த பிறகு, நான் மற்றொருவரை மணக்க மாட்டேன் என்று அழுது கொண்டே கூறியபோது, லிங்கன் மகிழ்ச்சி அடைந்தார்.

எனினும், தனக்குத் தானே ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்குகிறோமோ என எண்ணி, தற்கொலை செய்து கொள்ளக் கூடத் துணிந்தார். அவரது நண்பர்கள் எல்லாம் அவருடன் கடுமையாக விவாதித்து, அவரது தாழ்வு மனப்பான்மையை போக்கிக் கொள்ளுமாறு செய்தனர். அந்த நேரத்தில் தன் வருங்கால மனைவிக்கு லிங்கன் எழுதிய உருக்கமிகு கடிதத்தில் **"நான் எப்போதும் ஏழையாகவே இருந்து விட மாட்டேன். எளிய குடும்பத்திலே பிறந்தவனாக இருந்தாலும், வாழ்க்கையிலே எதிர் நீச்சல் போட்டுத்தான் முன்னேற வேண்டுமென்பதை நான் அறிவேன். இல்லாவிட்டால் ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடும். சாதனை புரிய வேண்டும், அல்லது சாக வேண்டும். சாவது சாதனையாக ஆகிவிடாது. கடுமையாக உழைத்து முன்னேறுவதுதான் சாதனை. அதுவே என் இலட்சியம்"** என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின்னர் தான் அவர்களது திருமணம் நடைபெற்றது.

லிங்கன் - மேரி டாட் தம்பதிகளுக்கு நான்கு ஆண் குழந்தைகள். அவற்றில் ஒன்று இறந்த போது, லிங்கன் பெரிதும் வருந்தினார். காடுகளில் சென்று தனிமையில் நேரத்தை கழித்தார். அந்த நேரத்தில் அவர் எழுதிய ஒரு கவிதையின் தொடக்கம் இவ்வாறு அமைந்தது.

**காதில் விழும் ஒலி எல்லாம்**
**இடி முழக்கம் ஆகிறது!**
**பார்வையில் தென்படும் நிலம் எல்லாம்**
**கல்லறைகளாக ஆகின்றன!**
**இதமான காற்றும்**
**கடும் புயல் ஆகிறது!**
**நான் சிந்தும் கண்ணீர்**
**மழை ஆகிறது!**

ஆப்ரகாம் லிங்கன் ஒரு நாள் வழக்கறிஞர் உடையை அணிந்து கொண்டு நீதி மன்றத்திற்கு சென்று கொண்டிருந்தார். வழியில் வெள்ளைப் பன்றி ஒன்று, வேலி ஒன்றில் தலையை நுழைத்துக் கொண்டு வெளியே வர முடியாமல் தவித்ததைக் கண்டு, வண்டியிலிருந்து இறங்கி பன்றியை விடுவித்தார். விடுபட்ட பன்றி மகிழ்ச்சியில் வாலைச் சுழற்றிய போது, அது சேற்றிலே பட்டு, லிங்கன் உடைகளையெல்லாம் நாசப்படுத்தி விட்டது. உடை மாற்றுவதற்காக லிங்கன் வீடு திரும்பியபோது, உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை என்று மனைவி கேட்க, அதற்கு லிங்கன், "பன்றியைத் தப்புவிக்காமல், நான் நீதி மன்றத்திற்குச் சென்றிருந்தால், என் மனம் அதையே நினைத்து வேதனைப்படும். விசாரணையில் மனம் சென்றிருக்காது." என்று கூறினாராம்.

வழக்கறிஞர் தொழிலில் லிங்கனின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஜேம் ஆம்ஸ்டிராங் என்பவர் மீது கொலைக் குற்றச் சாட்டு. வழக்காட வசதியற்ற நிலையில், இலவசமாக அவருக்காக லிங்கன் வாதாடினார். அவர் செய்த கொலையை நிலவொளியில் நேரில் கண்டதாகவும், அப்போது இரவு மணி 11 என்றும், நிலா வானில் உச்சியிலே இருந்தது என்றும் ஆறு பேர் நீதி மன்றத்தில் சாட்சியம் அளித்தனர். ஆனால் லிங்கன் வாதிடும்போது, கொலை நடைபெற்றது, பௌர்ணமிக்குப் பின்னர் எட்டாவது நாள் என்றும், அன்றையதினம் இரவு 12 மணிக்குப் பிறகுதான், நிலவு தோன்றியது என்றும், எனவே இரவு 11 மணிக்கு நிலவொளி இருந்ததாகவும், அதில் கொலையை நேரில் பார்த்ததாகவும் சாட்சிகள் கூறுவது உண்மைக்கு மாறானது என்றும் தெரிவித்த பிறகு ஜேம் ஆம்ஸ்டிராங் குற்றவாளியல்ல என்று நீதி மன்றம் விடுதலை செய்தது. லிங்கனின் வாழ்க்கை வரலாற்றில் இப்படி எத்தனையோ சம்பவங்கள் உண்டு.

1852 முதல் 1855 முடிய வழக்கறிஞர் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததோடு, அரசியல் மேடைகளிலே பங்கேற்று உரையாற்றிய லிங்கன், அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினார். 1858ஆம் ஆண்டு லிங்கன் செனட்டர் தேர்தலில் போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து ஸ்டீபன் டக்ளஸ் போட்டியிட்டார். அவர் லிங்கனை மட்டம் தட்ட வேண்டுமென்ற நோக்குடன், தேர்தல் பிரச்சாரத்தில் லிங்கன் மதுக்கடை நடத்தியதைப் பற்றிக் குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த லிங்கன், டக்ளஸ் கூறுவது உண்மைதான். அப்போது நான், கடை வைத்திருந்தபோது, என் கடையில் தான் டக்ளஸ் சிகரெட்டும், மதுப் பாட்டில்களையும் வாங்குவது வழக்கம். ஆனால் நான் பல ஆண்டுகளுக்கு முன்பே கடையை மூடி விட்டேன். ஆனால் நண்பர் டக்ளஸ், இன்னமும் மது அருந்துவதை நிறுத்தவில்லை என்று கூறியபோது கூட்டத்தினர் பாராட்டி வரவேற்றனர். ஆனால் அந்தத் தேர்தலில், லிங்கன், வெற்றி வாய்ப்பினை இழந்து விட்டார்.

1860ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நான்கு முனைப் போட்டி என்றாலும், ஜனநாயக கட்சி அல்லது குடியரசுக் கட்சியின் வேட்பாளர்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற இரு முனைப் போட்டி எனும் நிலைமைதான் இருந்தது. குடியரசுக் கட்சியின் சார்பில் லிங்கனா? செவார்டா? என்ற போட்டி கட்சிக்குள் எழுந்தபோது, செவார்டு தன்னை விட அரசியல் அறிவு முதிர்ந்த ஆப்ரகாம் லிங்கனை தலைவராக ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். ஜனநாயக கட்சியின் வேட்பாளராக ஸ்டீபன் டக்ளஸ் போட்டியிட்டார்.

லிங்கன் தேர்தல் பிரச்சாரத்தில் கடுமையாக ஈடுபட்டிருந்த நேரத்தில், கிரேஸ் என்ற ஒரு சிறுமி லிங்கனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், அவர் உடனடியாக கிருதா வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் அவரது கன்னத்தில் குழி விழுவது தெரியாது என்றும், தோற்றம் நன்றாக அமையுமென்றும் எழுதியிருந்தாள். ஏதோவொரு சிறுமி எழுதிய கடிதம் ஆயிற்றே என்று அதனை ஒதுக்கிவிடாமல், லிங்கன் கிருதா வைத்துக் கொண்டார். வெற்றி பெற்று நன்றியறிவிப்புக்காக கிரேஸ் வாழ்ந்த நகரத்திற்குச் சென்ற போது, அந்தக் கூட்டத்தில் அந்தப் பெண் இருக்கிறாளா என்று வினா எழுப்ப, கிரேசும் தன் தந்தையுடன் லிங்கன் அருகே சென்றபோது, அவளுக்கு நன்றி கூறி அந்த சிறுமியை தன்னுடைய சின்னஞ் சிறிய சிநேகிதி என்று கூட்டத்தில் அறிவித்தார்.

1861ஆம் ஆண்டில் அமெரிக்காவின் 11வது குடியரசுத் தலைவராக ஆப்ரகாம் லிங்கன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது இளமைக் காலத்தைப் பற்றி பத்திரிகையாளர்கள் அப்போது கேட்டபோது, ஒரு ஏழை மனிதனின் வாழ்க்கையிலே நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சி எதுவும் இருக்காது என்று பதில் கூறினார்.

அவருக்கு நல்ல நகைச்சுவை உணர்வு உண்டு. அவர் குடியரசுத் தலைவராக ஆனபிறகு, அரசுப் பணி கேட்டு ஏராளமான பேர் மனு கொடுத்த போது, லிங்கன் ஓர் கதையைச் சொன்னாராம்.

"மன்னர் ஒருவர் வேட்டைக்குச் செல்ல விரும்பிய போது, அமைச்சரை அழைத்து அன்று மழை வருமா என்று கேட்டிருக்கிறார். அமைச்சர் மழை வராது என்று கூறினார். மன்னர் வேட்டைக்குப் புறப்பட்டு சென்று கொண்டிருந்த போது, மேகங்கள் திரண்ட நிலையில் எதிரே வந்த விவசாயி ஒருவரிடம், மழை பெய்யுமா என்று கேட்க, நிச்சயமாக மழை பெய்யுமென்று பதிலளித்திருக்கிறார்.

விவசாயி கூறியதைப் போலவே மழையும் பெய்தது. அரசர் வியப்படைந்து அமைச்சரை பதவியிலிருந்து நீக்கி விட்டு, அந்த விவசாயியை அமைச்சராக நியமித்தார்."

புதிய அமைச்சரிடம் மழை பெய்யும் என்று உங்களால் எப்படி உரைக்க முடிந்தது என்று மன்னர் கேட்ட போது, தான் வீட்டில் ஒரு கழுதையை வளர்ப்பதாகவும், மழை வருவதற்கு முன்பு அந்தக் கழுதையின் காதுகள் நேராக விறைப்பாகி விடும் என்றும், அதன் மூலம் மழை வருவதைத் தன்னால் புரிந்து கொள்ள முடியுமென்றும் அந்த விவசாயி பதிலளிக்க, உடனே அந்த மன்னர் இந்த விவசாயியை விட, அவரது கழுதைதான் புத்திசாலி என்று கூறி, அமைச்சர் பதவியிலிருந்து அந்த விவசாயியை நீக்கி விட்டு, கழுதையை அமைச்சராக நியமனம் செய்தாராம். அடுத்த நாள் ஊரிலே உள்ள கழுதைகள் எல்லாம் திரண்டு வந்து மன்னரைப் பார்த்து, தங்களையும் அமைச்சராக்க வேண்டுமென்று குரல் கொடுத்தனவாம். அதைப் போல தன்னிடம் வேலை கேட்கிறவர்களிடம் ஆப்ரகாம் லிங்கன் இந்த வேடிக்கை கதையைக் கூறியதாக அவரது வாழ்க்கை வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1865 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவராக இருந்த ஆப்ரகாம் லிங்கன், கேட்டீஸ்பர்க் நகரத்திற்கு அதற்கு நான்கு திங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு சண்டையில் உயிரிழந்த போர் வீரர்களின் நினைவிடங்களில் அஞ்சலி செலுத்துவதற்காக வந்தார். அப்போது சில நிமிடங்கள் பேசியபோது தான் உலகம் முழுவதும் இன்றளவும் மறக்கப்படாத ஒரு சொற்றொடரான "மக்களுக்காக - மக்களால் அமைக்கப்பட்ட மக்களின் அரசாங்கம்" (Government of the People. By the People) என்ற மக்களாட்சித் தத்துவச் சுடரை மாணிக்கப் பரிதியாக ஏற்றி வைத்தார்.

அவர் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்பதற்கு முன்பே, அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்கி விட்டது. அது நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. அமெரிக்காவில் அடிமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்த ஆப்ரகாம் லிங்கன் மீது ஆத்திரமுற்று, அடிமைத்தனத்துக்கு விடை கொடுத்து விட்டு, ஆதிக்கச் சக்திகளின் முதுகெலும்பை உடைப்பது, ஆண்டவனுக்கே ஆகாது எனக் கருதிய ஒரு நடிகர், ஆப்ரகாம் லிங்கனின் ஆவி போக்கவே திட்டமிட்டார். அவர் பெயர் ஜான் வைக்ஸ்பூத். அந்தக் கொடிய மனிதரின் திட்டம் ஒரு நாடகக் கொட்டகையில் நிறைவேறியது. ஆம்! லிங்கன் அவரது மனைவியின் விருப்பத்திற்கிணங்க வாஷிங்டன் நகரில் உள்ள ஒரு தியேட்டருக்கு நாடகம் பார்ப்பதற்காகச் சென்றிருந்த போது, நாடகம் நடந்து கொண்டிருக்கும் போதே, குடியரசுத் தலைவர் வீற்றிருந்த இடத்தில் குண்டு வெடிக்கும் பயங்கர ஒலி எழுந்தது. நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மேடையிலே தான் துப்பாக்கி சூடு நடப்பதாகக் கருதிக் கொண்டார்கள். தலையில் பின்புறம் குண்டு பாய்ந்ததால் ஆப்ரகாம் லிங்கன் கீழே விழுந்தார். அனைவரும் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தபோது, கொலையாளி பூத் அந்தத் தனி அறையின் பின்புற பலகையிலே ஏற்கெனவே அமைத்திருந்த துவாரத்தின் வழியாக உள்ளே நுழைந்து, அவன் நினைத்ததைச் சாதித்திருக்கிறான்.

உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இரவு முழுவதும் சிகிச்சை அளித்தும் பயன் இல்லாமல், மனிதனை மனிதனாக நடத்த வேண்டுமென்று துடித்த அந்த மாமனிதனின் இதயத் துடிப்பு நின்று விட்டது - குடிலில் பிறந்தார், கோபுரமாக உயர்ந்தார் - சமத்துவ முழக்கமிட்டார் - ஜனநாயகம் தழைத்திட உழைத்த அந்த உத்தமர்! இன்றைக்கும் "வாஷிங்டன் நகரில்" நினைவு மண்டபத்தில் பளிங்குச் சிலையாக நமக்கும், நாட்டுக்கும், இந்த நானிலத்து மக்களுக்கும் காட்சி தருகிறார்.

அடிமைச் சங்கிலி உடைத்திட சுத்தியல் ஓங்கிய அந்தச் சுயமரியாதை வீரரைச் சுட்டு வீழ்த்தியவனும் அடுத்த மாதமே வீழ்த்தப்பட்டான் - ஆப்ரகாமின் ஆதரவாளர்களால்! பழிக்குப் பழி என்பது பரிகாரமாகுமா? ஆகாது என்பது போலத்தான் "ஆப்ரகாம்" சிலை காட்சி தருகிறது, அமெரிக்க நாட்டு வாஷிங்டனில்!

உடன்பிறப்பே, "ஸ்பிரிங் பீல்டு" என்ற நகரில், கணவன், மனைவி தங்கியிருக்கும்போது குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆப்ரகாம் லிங்கனுக்கு வெற்றி வாய்ப்பு என செய்திகள் வந்து குவிந்து கொண்டிருந்தன. லிங்கனுக்கும் -அவர் மனைவி மேரி டாட்டுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை "இர்விங் ஸ்டோன்" என்பவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளதைப் படித்தால்,

மனைவி மேரியின் இதயத்து இனிமையும் - லிங்கனின் எளிமையும் - நமக்குப் புலப்படும் - அந்தப் பகுதி வருமாறு :-

"இத்தடவை மேரியும், ஆப்ரகாமும் வாஷிங்டனுக்குச் செல்லும்போது அங்கே அவர்கள் ஓட்டல் ஒன்றுக்கும் போக வேண்டியிராது! அல்லது, பன்றிப் பட்டியையும், கக்கூசுகளையும் நோக்கியிருக்கும் ஒரு பின்பக்க அறையை ஆக்ரமித்துக் கொள்ளவும் வேண்டியதில்லை. இத்தடவை அவள் நகரம் முழுவதும் சுற்றி, எப்பகுதி நல்லது, எங்கே தன்னால் கொடுக்கக் கூடிய வாடகைக் குள் வீடு கிடைக்கும் என்றெல்லாம் கண்டுபிடித்துச் சிரமப்பட வேண்டியதில்லை. இத்தடவை நகரத்தின் தெற்கத்திய சமூகத்தால், அவள் அவமானப்படுத்தப்படவோ, ஒதுக்கப்படவோ மாட்டாள்.

நிம்மதியான தருணத்தில் அவள் ஆப்ரகாமின் கைகளைப் பற்றி - தாழ் வாரத்து ஸோபா ஒன்றில் அமர்த்தினாள்.

"ஆப்ரகாம்! நாம் எட்டு வருஷங்களுக்கு ஸ்பிரிங் பீல்டை விட்டு வெளியே இருக்கப் போவதால், இங்குள்ள நமது வீட்டை விற்று விடுவது நல்லதல்லவா?"

அவர் கோபம் கொண்டவர் போல் குதித்து எழுந்தார். பிறகு கேலியாக அவளை உற்று நோக்கி விட்டுச் சொன்னார். "மேரி, ஜனாதிபதிகள் நான்கு வருஷப் பதவிக்காகத்தான் தேர்ந்தெடுக்க படுகிறார்கள் என்பது உனக்குத் தெரியாதா?"

"வாஷிங்டன், ஜெஃபர்ஸ், மாடிஸன், மன்ரோ, ஜாக்ஸன் ஆகிய எல்லா ஜனாதிபதிகளுமே இரண்டு தவணைகள் பணியாற்றியிருக்கிறார்கள். தட்டுமுட்டுச் சாமான்களுடன், நம் வீட்டிற்கு நாலாயிரம் டாலர் வாங்கித் தருவதாக ஜேம்ஸ் காங்கிளிங் கூறுகிறான். பிறகு வீட்டு ரிப்பேர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமிராது" என்றாள் மேரி.

"ஆனால் மேரி, இது நம் வீடு! நான் என் வாழ்வில் பெற்றிருக்கும் ஒரே வீடு! இதை நான் மிகவும் விரும்புகிறேன். தவிர, தட்டுமுட்டுச் சாமான்கள் இல்லாமலேயே இதற்கு வருஷத்துக்கு முந்நூற்றைம்பது டாலர் வாடகை தருவதாகவும் கூறு கிறார்கள். அதோடு பதவிக் காலம் முடிந்து திரும்பி வரும்போது நமக்கு வசிக்க ஒரு வீடு வேண்டாமா?"

"மறுபடியும் ஸ்பிரிங் பீல்டுக்கா? தலைநகரத்தில் பல வருஷங்களைக் கழித்த பிறகு, நிச்சயம் நீங்கள் ஒரு விரிந்த உலகத்தில்தான் வசிக்க விரும்புவீர்கள், இல்லையா?" என்று கேட்டாள் அவள்.

"வாஷிங்டனில் இருக்கப் போகும் நாட்களில், என் வீடு என்று நினைத்துக் கொள்ள ஓர் இடம் இல்லையானால், நான் உடைமைகளை இழந்த ஒரு மனிதனைப் போல்தான் உணருவேன். இன்று ஆபீசுக்குச் சென்றபோது, அங்குள்ள நமது இடத்தையும் அப்படியே வைத்திருக்கும்படி பில்லியிடம் கூடச் சொல்லியிருக்கிறேன். நான் வாஷிங்டனி லிருந்து திரும்பும்வரை உயிர் வாழ்ந்தேனேயானால், திரும்பியதும் வழக்கப்படி, இடையே எதுவுமே நிகழாததுபோல் மீண்டும் சட்டத் தொழிலைத் தொடங்குவேன்" என்று கூறினார் ஆப்ரகாம்.

இந்த உரையாடலையும் - லிங்கனின் உயிரைக் குடித்த அந்தக் கொடிய நிகழ்வையும் நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் வெடித்து விடும் போல் தோன்றுகிறதல்லவா?

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 22.11.2007)